# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2173/13 - 2020 අප්‍රේල් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.04.30

*2173/13 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**டலஸ் அலஹப்பெரும** (பா. உ.),
கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.

கொழும்பு,
*2020, ஏப்பிறல் 29.*

கட்டளை

1. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க கட்டளையானது கீழ்வரும் விதத்தில் 2020 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக மாத்திரம் இவ்வண்ணம் திருத்தம் செய்யப்படுகின்றது :

- III ஆம் உப பிரிவில் தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் அமைப்பு விதிகளுக்கு ஏற்புடைய ஒழுங்குவிதிகளின் கீழ் (அ) ஆம் பந்தியில் மே மாதம் முப்பத்தோராம் திகதி எனும் பதத்தினை நீக்கி ஒகத்து மாதம் முப்பத்தோராம் திகதி எனும் பதத்தினைப் பிரதியிடுவதனால்,




*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

- (2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து மீண்டும் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட III ஆம் உப பிரிவில் தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/ சம்மேளனங்களின் அமைப்பு விதிகளுக்கு ஏற்புடைய ஒழுங்குவிதிகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ள (அ) பந்தியானது மீண்டும் செல்லுபடியுடையதாக ஆகப்பெறும்).

2. 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதிய 2166/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்க கட்டளைகளில் இலக்கம் 01 இன் (ஆ) ஆம் பந்திக்குரிய தெரிவுக்குழு கட்டளைகள் 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.